## பன்முக இந்தியாவைக் கொண்டாடுவோம்!

# குடியரசு நாள் வாழ்த்துகள்! வெல்வோம் ஒன்றாக!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப்பதிவு!

சென்னை, ஜன.27-

77ஆவது குடியரசு நாளையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தி வருமாறு:-

**பன்முக இந்தியாவைக் கொண்டாடுவோம்!**

**அனைவருக்கும் எனது குடியரசு நாள் வாழ்த்துகள்! வெல்வோம் ஒன்றாக!**

**எனது குடியரசு நாள் வாழ்த்துகள்!**

இவ்வாறு முதல்வர் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

# தொடரட்டும் ஸ்டாலின்!



இன்று சட்டப்பேரவையில் தனது ஐந்தாண்டு ஆட்சிக்கால நிறைவைப் பற்றிய சுய மதிப்பீட்டினை பதிவு செய்தார் முதல்வர் ஸ்டாலின்.

என்னுடைய மதிப்பீட்டில் இந்த அளவு செயல்முனைப்புடன் (executive intent) விளங்கிய ஆட்சியை நான் இதுவரை கண்டதில்லை. ஐந்தாண்டுகளாக இடைவிடாமல் செய்திகளை பின் தொடர்ந்து வருகிறேன்.

பல்வேறு துறைகளிலும் புதிய திட்டங்கள், சிந்தனைகள் என அனைவரையும் தொடர்ந்து புத்தாக்க முயற்சிகளில் ஈடுபடத் தூண்டியுள்ளார். பூங்கா, நூலகம், மருத்துவமனை, பேருந்து நிலையம் என புதுப்பொலிவு பெற்றவையின் பட்டியல் மிக நீண்டது.

முதலீடுகளை ஈர்ப்பது, பொருளாதார வளர்ச்சியில் இந்தியாவில் முன்னணி வகிப்பது என்பவை அடிப்படையான சாதனைகள். அதற்கு மேல், பல்வேறு அம்சங்களில் ஆட்சியின் முனைப்பு வெளிப்படுவதுதான் முக்கியம்.

மக்கள் நலத் திட்டங்களிலும், பொதுவான காலை உணவுத் திட்டம், மகளிர் உரிமைத் தொகை போன்றவை தவிர நான் முதல்வன், புதுமைப்பெண் என்றெல்லாம் மிக முக்கியமான புதிய முயற்சிகளை எடுத்துள்ளார்கள். பள்ளிக் கல்வியில் பல மதிப்புக்கூட்டும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இதையெல்லாம் எடுத்துச் சொல்வதை சார்புத்தன்மை, ஆதரவு என்று மட்டும் புரிந்துகொள்வது அவலமான மனோநிலை. குறை சொல்வது மட்டுமே நடுநிலை, பாராட்டுவது சார்புத்தன்மை என்று நினைப்பது விமர்சன சிந்தனைக்கு முற்றிலும் எதிரானது.

உதாரணமாக இன்றைய தொலைகாட்சி விவாதங்களில் இதுதான் பேசுபொருளாக இருந்திருக்க வேண்டும். சன் நியூஸ் கேள்விக்களத்தில் சிறிதளவு பேசினார்களே தவிர, பிற விவாதங்களில் முதல்வரின் உரை கவனம் பெறவேயில்லை. சன் நியூஸில் ராஜீவ் காந்தி பங்கேற்றதைத் தவிர பிற சேனல்களில் தி.மு.க செய்தித் தொடர்பாளர்கள் யாரும் பங்கேற்கவில்லை.

பாராட்ட வேண்டியதை பாராட்டுவது என்பதும் மக்களாட்சியில் மிக மிக முக்கியம். இல்லாவிட்டால் இதையெல்லாம் செய்யாமலேயே அரசியல் பண்ணலாம் என்ற எண்ணமே மேலோங்கும்.

ஸ்டாலின் தொடரட்டும், தமிழ்நாடு வெல்லட்டும்!



**ராஜன் குறை கிருஷ்ணன்**
*பேராசிரியர்*
*அம்பேத்கர் பல்கலைக் கழகம், புதுடெல்லி.*

## 11 முறை தேர்தலில் தோல்வியடைந்த

# எடப்பாடி பழனிச்சாமிக்கு 12வது தோல்வியை 2026 நிச்சயமாகத் தரும்!

## புதுக்கோட்டையில் அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டி!



புதுக்கோட்டை, ஜன.27–

புதுக்கோட்டை கலைஞர் கருணாநிதி மாவட்ட விளையாட்டு மைதானத்தில் இது நம்ம ஆட்டம் 2026 முதலமைச்சர் இளைஞர் விளையாட்டு திருவிழாவை மாவட்ட ஆட்சியர் அருணா தலைமையில் தமிழ்நாடு இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி தொடங்கி வைத்தார். இதில் புதுக்கோட்டை எம்.எல்.ஏ. முத்துராஜா, மாநகராட்சி மேயர் திலகவதி செந்தில் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். அப்போது செய்தியாளர்களை சந்தித்த தமிழ்நாடு இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி கூறுகையில்:

தேசிய ஜனநாயக கூட்டணி என்பது அதிமுகவின் ஒரு பகுதியும் அதே போல பாஜகவும் இணைந்ததை தவிர அதை நாங்கள் வலுவாக பார்க்கவில்லை, அது பலவீனமான கூட்டணி, எத்தனை கட்சிகள் அந்த கூட்டணியில் வந்து சேர்ந்தாலும் திமுகவின் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி இந்தியா கூட்டணியை யாராலும் எதுவும் செய்ய முடியாது. தமிழ்நாட்டு மக்களின் மனதில் யார் இருக்கிறார்களோ அவர்கள் தான் வெல்ல முடியுமே தவிர கூட்டத்தைக் கூட்டி காட்டி யாராலும் வெல்ல முடியாது.

தமிழ்நாட்டின் மக்களின் மனநிலையை இன்றைக்கு ஒவ்வொரு சர்வே மூலமாக நாங்கள் அறிந்து வருகிறோம். மீண்டும் திராவிட மாடல் ஆட்சி தொடர வேண்டும். அதன் மூலமாக தங்களுக்கு இன்னும் பல நன்மைகள் கிடைக்க வேண்டும் என்பதுதான் தமிழ்நாடு மக்களுடைய விருப்பம். இந்த ஐந்தாண்டு காலம் நாங்கள் சொன்ன வாக்குறுதிகளை நிறைவேற்றி மக்களுக்கான திட்டங்களை எல்லாம் நிறைவேற்றி இருக்கின்ற அரசு தான் திராவிட மாடல் அரசு. இந்த அரசு தொடர வேண்டும் என்பதுதான் தமிழ்நாடு மக்களின் விருப்பம். அந்த விருப்பத்தை மோடியாலோ வேறு யாராலும் புரிந்து கொள்ள முடியாது.

கிரைம் மாஃபியா கரப்ஷன் எல்லாம் பிரதமர் மோடியின் கட்சிக்கும் அவர்களது கூட்டணிக்கும் தான் பொருந்துமே தவிர எங்களுக்கு ஒரு துளியும் பொருந்தாது.

11 முறை தேர்தலில் தோல்வியடைந்த எடப்பாடி பழனிச்சாமிக்கு 12 வது தோல்வியை 2026 நிச்சயமாக தரும்.

தேர்தலுக்காக பிரதமர் ஆயிரம் பேசினாலும் தேர்தலில் எதிரொலிக்காது தமிழ்நாட்டு மக்கள் கெட்டிக்காரர்கள் அவர்களுக்கு எது நல்லது எது கெட்டது என்பது தெரியும். தங்களுக்கு எந்த ஆட்சி உதவி செய்யும் என்பது தமிழ்நாடு மக்களுக்கு தெரியும் மோடி ஆயிரம் குற்றச்சாட்டுகளை சொல்லலாம் குறைகளை சொல்லலாம் ஆனால் அவர் தனக்கு முன்னால் இருக்கக்கூடிய மாநிலங்களை எல்லாம் பார்த்துவிட்டு பாஜக ஆளுகின்ற மாநிலங்களையெல்லாம் பார்த்துவிட்டு அதைவிட தமிழ்நாட்டில் ஏதாவது குற்றங்கள் கூட என்று சொன்னால் அப்போது நாங்கள் பதில் அளிக்கிறோம்.

யார் வந்தாலும் வந்தவர்களை வரவேற்கின்ற இயக்கம் தான் திமுக. அவர்களுக்கு உரிய மரியாதை தருகிற தலைவர் தான் மு.க.ஸ்டாலின். எங்களை நம்பி வருகின்றவர்கள் கெட்டுப் போனவர்கள் கிடையாது. மற்றவர்களை நம்பி செல்பவர்கள் மோசம் போவதில் எந்தவித சந்தேகமும் கிடையாது.

எடப்பாடி பழனிச்சாமியை டி.டி.வி. தினகரன் விமர்சனம் செய்து பேசிவிட்டு மீண்டும் கூட்டணி சேர்ந்துள்ளது வெட்கக்கேடு.

தேசிய ஜனநாயக கூட்டணி காட்டும் ஒட்டு மொத்த கூட்டத்தையும் நாங்கள் மகளிர் அணி கூட்டத்தின் மூலமாகவே பீட் செய்து விடுவோம். பகுதி பகுதியாக மக்கள் அலையை கொண்டு செல்கின்ற சக்தி இந்தியாவிலேயே தி.மு.க.வுக்கு இருப்பதைப் போல வேறு எந்த இயக்கத்துக்கும் கிடையாது.

நாங்கள் எப்போதும் எதிரிகள் இல்லை என்று சொல்லக்கூடிய அளவுக்கு இறுமாப்பு கொண்டவர்கள் கிடையாது. எதிரிகள் இருக்கிறார்கள் ஆனால் எங்களோடு மோதும் அளவிற்கு அவர்கள் வலிமையாக இல்லை.

தேர்தல் என்று வந்து விட்டால் மக்கள்தான் தீர்மானிக்க வேண்டும். மக்களிடத்தில் நாங்கள் சென்று எங்கள் கருத்துக்களை சொல்கின்ற பொழுது மக்கள் யார் கருத்துக்களை ஏற்றுக் கொள்கிறார்கள் என்று பார்க்க வேண்டும். நாங்கள் சொன்னதை செய்துள்ளோம் மகளிர் உரிமைத்தொகை தருகிறோம் என்று கூறினோம் அதை தந்துள்ளோம். நாங்கள் ஒரு கோடியே 32 லட்சம் பேருக்கு மகளிர் உரிமைத் தொகை தந்திருக்கிறோம்.

வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள 60 லட்சம் குடும்பங்களுக்கு 2000 ரூபாய் தருகிறோம் என்று கூறி ஏமாற்றிய எடப்பாடி பழனிச்சாமியை மக்கள் நம்புவார்களா, அல்லது ஒரு கோடியே 32 லட்சம் குடும்பங்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் மகளிர் உரிமைத் தொகையைக் கொடுக்கிற தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலினை நம்புவார்களா என்பதை எண்ணி பார்க்க வேண்டும்.

கவுண்டவுன்ஸ் ஸ்டார்ட் ஆகிவிட்டது தான் அது எங்கள் வெற்றிக்கான கவுண்டவுன் ஸ்டார்ட் ஆகிவிட்டது என்று தெரிவித்தார்.

## தமிழ்நாடு பள்ளிகள் கட்டணம் வசூலிப்பதை முறைப்படுத்துதல் திருத்தச் சட்ட முன்வடிவு நிறைவேற்றம்!

# முதல்வரின் அறிவுறுத்தல்படி பள்ளிக் கட்டணங்களை முறைப்படுத்துவோம்!

## சட்டப்பேரவை பதிலுரையில் – அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி உறுதி!



**சென்னை, ஜன.27 -**

**சட்டப்பேரவையில் ஜன.24 அன்று - 'தமிழ்நாடு பள்ளிகள் கட்டணம் வசூலிப்பதை முறைப்படுத்துதல் திருத்தச் சட்ட முன்வடிவு' மீதான விவாதத்திற்கு பதிலளித்துப் பேசிய பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, " முதல்வர் அவர்களின் அறிவுறுத்தல்படி பள்ளிக் கட்டணங்களை முறைப்படுத்துவோம்!" என்று உறுதிபடக் குறிப்பிட்டார்.**

**சட்டப்பேரவையில் அவர் பேசியதாவது:-**

சட்டமன்ற உறுப்பினர்கள் வேல்முருகன், நாகைமாலி, முகம்மது ஷாநவாஸ், ஜி.கே.மணி ஆகியோர் பல்வேறு கருத்துகளை இது சார்ந்து சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக நம்முடைய ஜி.கே.மணி அவர்கள் சொன்னமாதிரி private schoolsக்கான கட்டணத்தை முறைப்படுத்துவதை கொண்டுவந்ததே முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான். So, இதனுடைய அடுத்த version ஆகத்தான், அதிகாரிகள் சார்ந்து மட்டுமல்லாமல், இதில் மாநில அளவில் இருக்கக்கூடிய ParentTeacher Association சார்ந்த உறுப்பினர் ஒருவரும் இடம்பெற வேண்டும், அவ்வாறு இடம்பெற்றால் தான் சரியான கருத்துகள் என்ன என்பதை உள்வாங்கிக்கொள்ள முடியும். ஏனென்றால் ParentTeacher Associationலிருந்து வருகிறவர்களுக்குத்தான் அந்த களத்தினுடையparents என்ன சொல்கிறார்கள் என்ற கருத்தை நாம் உள்வாங்க முடியும் என்பதற்காகத்தான் அவர்களையும் உள்ளே கொண்டு வந்தோம். முன்பு Matriculationsக்கான Director இருந்தார்கள். தற்போது அதை மாற்றி Director for private schools என்று கொண்டு வந்திருக்கிறோம். So, அவர்களையும் இதில் one of the உறுப்பினராக கொண்டுவருவதாக சொல்லியிருக்கிறோம்.

குறிப்பாக, இதுமாதிரியான கருத்துகள் வரும்போது 15 நாட்களுக்குள் யாராவது கருத்து இருந்தால் சொல்லுங்கள், அடுத்து நாங்கள் freeze செய்யப்போகிறோம் என்று இல்லாமல், 15 நாட்களை 30 நாட்களாக நான் நீட்டித்து தருகிறேன். உங்களுடைய கருத்துகள் எதுவாக இருந்தாலும் அதை உள்வாங்கிக்கொண்டு அதற்குத் தகுந்தாற்போல், அதை நாங்கள் சரிசெய்வோம் என்று சொல்லியிருந்தோம். இதற்கு முன்பு சட்டம் எப்படி இருந்தது என்றால், private schoolsஐ பொறுத்தவரையில் அவர்கள் எப்பொழுது வேண்டுமானாலும் கட்டணத்தை ஏற்றிக்கொள்ளலாம், ஏற்றாமலும் இருக்கலாம், நாளை கூட ஏற்றிக்கொள்ளலாம் என்று இருந்ததை முறைப்படுத்தி, மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை இந்தக் குழு உட்கார்ந்து பேசி, இன்றைக்கு தகுந்தாற்போல் இந்த கட்டணம் உயர்த்தப்பட வேண்டுமா, இல்லை உயர்த்தப்படக்கூடாதா என்ற அளவிற்கு இருந்திட வேண்டும் என்பதற்காகத்தான் முழுமையாக இதை நாம் கொண்டு வந்திருக்கிறோம். வேல்முருகன் அவர்கள் சொன்னமாதிரி முறையான கட்டணம் சார்ந்து அதை நாம் தெளிவுபடுத்திட வேண்டும். மிரட்டுகிறார்கள் என்று எல்லாம் சொன்னார்கள்.

சில நேரங்களில் பெற்றோரே சொல்வதும் கிடையாது. எப்படியோ என்னுடைய பிள்ளைகள் படித்தால் போதும். இப்போது நீங்கள் சொல்வதுபோன்று, தனியார் பள்ளிகளில் சேர்வதை நாங்கள் யாருமே எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. பிள்ளைகள் படித்தால் போதும் என்று நினைக்கிற அரசாங்கம்தான் நம்முடைய அரசாங்கம். இன்றைக்கு நமது முதலமைச்சர் அவர்களின் நிர்வாகத் திறமையின்மூலமாக per capita income ஓராண்டுக்கு ரூபாய் மூன்று இலட்சத்து அறுபதாயிரமாக உயர்ந்துள்ளது. So, இன்றைக்கு இருக்கக்கூடிய காலச்சூழ்நிலையில் எங்கு வேண்டுமானாலும் பிள்ளைகளை சேர்க்கட்டும். இது ஜனநாயக நாடு. கையைப் பிடித்து இழுத்து வந்து நீ அரசுப் பள்ளியில்தான் சேரவேண்டும் என்று சொல்வதைக் காட்டிலும், நாங்கள் நிறைய திட்டங்களைக் கொண்டுவருகிறோம். தேவைப்படும்பட்சத்தில், எங்கள் அரசுப் பள்ளிகளை பயன்படுத்திக்கொள்ளுங்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதற்காகத்தான் நாங்கள் தொடர்ந்து செய்தோம். Transparency இருக்க வேண்டும், பிள்ளைகள் படித்தால் போதுமென்ற எண்ணம்.

அதே நேரத்தில், CBSE Schools and IB, IGCSECambridge போன்று IBO சார்ந்து வரும்போது, அதனுடைய கட்டுப்பாடு என்பது Regional Officeக்கு சென்றுவிடுகிறது. Central Government கட்டுப்பாட்டிற்கு சென்றுவிடுகிறது. அதனால்தான் ஆதங்கத்தோடு வேல்முருகன் அவர்கள் சொல்லும்போது நம்முடைய Stateல் நடத்தும்போது, அதற்கான முழு அதிகாரம் நம்மிடம்தான் இருக்க வேண்டும் என்கின்ற கருத்தைச் சொன்னார்கள். But இருந்தாலும், அதுசார்ந்து எந்தக் கருத்துகள் வந்தாலும் immediate ஆக நாங்களும் R.O மூலமாக சொல்கிறோம், பிள்ளைகள் படிக்க வரும்போது கட்டணத்தை ஒரு காரணம் சொல்லி தயவுசெய்து அவர்களை வெளியில் நிற்க வைக்காதீர்கள் என்பதை நாங்களும் வலியுறுத்தி சொல்லிக் கொண்டிருக்கிறோம். அதேபோல, matriculation சார்ந்து, நம்முடைய கட்டமைப்பில் இருக்கக்கூடிய தனியார் பள்ளிகள் சார்ந்து வரும்போது, பல சட்டமன்ற உறுப்பினர்கள், இன்று நாங்களே சில நேரங்களில் அறக்கட்டளை மூலமாக பிள்ளைகளை படிக்கவைக்கிற காரியத்தை செய்து கொண்டிருக்கிறோம்.

அதே நேரத்தில், அந்த private schoolsஐ சார்ந்தவர்களிடமும் நாம் தொடர்ந்து சொல்லிக் கொண்டிருக்கிறோம். நானும் தொடர்ந்து 4 வருடங்களாக press peopleஐ பார்க்கிறபோது சொல்கிறேன். யாராவது பெற்றோர்கள் எங்களிடம் வந்து ஒரு புகார் சொன்னார்கள் என்றால், அடுத்த நிமிடம் அந்தப் பள்ளிகள்மீது நாங்கள் நடவடிக்கை எடுக்க தயாராக இருக்கிறோம் என்பதை வலியுறுத்தி செய்து கொண்டிருக்கிறோம். எப்படிப்பட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதை நாங்கள் வெளியில் சொன்னால்தான் அது சரியாக இருக்கும் என்று சொல்கிறார்கள். சில நேரங்களில் பெற்றவர்களும் அதைச் சொல்வதற்கு தயக்கம் காட்டுகிறார்கள். இதைச் சொல்லி நாளைக்கு நமது பிள்ளைகளை ஏதாவது செய்துவிடுவார்கள் என்று தயக்கம் காட்டுகிறார்கள். அதுமாதிரி பயப்படத் தேவையில்லை.

ஒரு almighty என்பது அரசாங்கம் தான். நீங்கள் அரசாங்கத்திடம் சொன்னீர்களென்றால் மற்றவைகளை நாங்கள் பார்த்துக்கொள்கிறோம் என்று சொல்லியிருக்கிறோம். இருந்தாலும் உங்களுடைய கருத்துகளை நாங்கள் உள்வாங்கிக்கொண்டு அதை ஒரு புதிதான விதிகள்மூலமாக உள்ளே அதை உட்படுத்தி, அதைச்சார்ந்தும் நல்ல ஒரு நடவடிக்கையை நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய அறிவுறுத்தலின்படி நாங்கள் கண்டிப்பாக செய்வோம் என்பதை மட்டும் இந்தநேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இவ்வாறு அவர் பதிலுரை வழங்கினார்.

